**இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவினால் சபைப்படுத்தப்பட்ட நிலையியற் கட்டளை 119 (4) தொடர்பாக அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி பாராளுமன்றிற்கு சமர்ப்பித்தல்.**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொகுப்பு இலக்கம் : 290

மாவட்ட செயலகம் - அநுராதபுர மாவட்ட செயலகம்

| அ.க.குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல் | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை | தற்போதைய மதிப்பீடு |
|---|---|---|
| 2004.05.11 ஆம் திகதிய 171/2004 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் அரசாங்க சம்பளம் தயாரிக்கும் கனனி மென்பொருளுக்குறிய இரகசிய குறியீடு மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்படவில்லை | 2022 மற்றும் 2023 ஆம் வருடங்களுக்கான சம்பளம் தயாரிக்கும் கனனி மென் பொருளுக்குறிய இரகசிய குறியீடு மாற்றுதல் மூன்று மாதத்திற்கு ஒரு முறை செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான ஆவணமொன்றும் கையாளப்படுகிறது. | 2023.12.05 ஆம் திகதி இரகசிய குறியீடு மாற்றப்பட்டதன் பிற்பாடு மீண்டும் 2024.03.01 ஆம் திகதி இரகசிய குறியீடு மாற்றப்பட்டதுடன், எதிர்காலத்தில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை இரகசிய குறியீடு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்தினுள் பதிலளிக்கப்படாத சந்தர்ப்பம் காணப்பட்டது. | உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் 2021 ஆம் வருடத்தினுள் பிரதேச செயலகங்கள் 11 இன் உள்ளக கணக்காய்வு பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக அந்த அலுவலகங்களுக்கு கணக்காய்வு விசாரணை 11 வழங்கப்பட்டுள்ளது. அந்த கணக்காய்வு விசாரணை 11 இல் ஒரு மாதத்தினுள் பதில் பிரதேச செயலகங்கள் 05 சமர்ப்பித்ததுடன், எஞ்சிய 06 அலுவலகங்களில் 05 1,1/2 மாதத்தினுள் பதில் சமர்பிக்கப்பட்டுள்ளது. ஒரு அலுவலகம் மாத்திரம் (கஹடகஸ்திகிலிய) சமர்ப்பிக்க 07 மாத நீண்ட காலம் சென்றுள்ளது. அப்போது நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று காரணமாக உத்தியோகத்தர்களை அலுவலகத்திற்கு வரவழைப்பது கட்டுப்படுத்தியதன் விளைவாக இந்த கால தாமதம் ஏற்பட்டதற்கு காரணமாகும். | தற்போது உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய காலத்தினுள் பெற்றுக்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்கள் தெளிவூட்டப்பட்டுள்ளனர். சரி செய்து கொள்ள வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. |
| கணக்காய்வுக் குழு குறைந்தளவு எண்ணிக்கையாவது கூட்டப்படவில்லை | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் DMA/01-2019 இலக்க மற்றும் 2019/01/12 ஆம் திகதிய சுற்றறிக்கையின் உப இலக்கம் 5.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைப்படி 2021 ஆம் வருடத்தினுள் காலாண்டுக்கு 01 வீதம் 04 காலாண்டுகளுக்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 04 நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது அப்போது நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று காரணமாக | 2023 ஆம் வருடத்தினுள் ஒவ்வொரு காலாண்டுக்கும் குழுக் கூட்டம் ஒன்று வீதம் 2023 ஆம் வருடத்திற்குறிய குழுக் கூட்டம் 04 நடாத்தப்பட்டுள்ளது. 2024 ஆம் வருடத்தின் முதலாம் காலாண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | உத்தியோகத்தர்களை அலுவலகத்திற்கு வரவழைப்பது மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால், எதிர்பார்க்கப்பட்ட 04 கூட்டங்களும் நடாத்த முடியாது போனது. அதில் 2021.03.23 ஆம் திகதி முதலாம் காலாண்டு கூட்டம் மற்றும் 2022.01.07 ஆம் திகதி நான்காம் (இறுதி) காலாண்டுக்குறிய கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. | |
| வாகனமொன்று செயலிழந்து 6 மாதங்களுக்கு குறைவான காலத்தில் பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்படவில்லை. | பயன்பாட்டிலிருந்து ஒதுக்குதலுக்குரிய 13 வாகனங்களில் 06 வாகனங்கள் பயன்பாட்டிலிருந்து ஒதுக்குவதற்கான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. பின்வரும் 07 வாகனங்கள் பயன்பாட்டிலிருந்து ஒதுக்க வேண்டியுள்ளது. அது தொடர்பில் பின்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>GI-7329 - துவிச்சக்கர வண்டி<br>50-0305 - டபள்கெப் வண்டி<br>43-3017 – லொரி பவுசர்<br>43-2967 - லொரி பவுசர்<br>31-6753 – மோட்டார் வண்டி<br>NC MY-8024 } இரானும் கையளித்த<br>NCMY -8028 } துவிச்சக்கர வண்டி<br><br>மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய மீண்டும் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த 05 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த அறிக்கை அனுமதிக்காக அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலய 05 வாகனங்களுக்கான அனுமதி கிடைத்த பின் அமைச்சின் செயலாளரது அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள இரானுவத்தினால் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ள 02 துவிச்சக்கர வண்டி உட்பட மேலய 07 வாகனங்களுக்கும் பத்திரிகை விளம்பரம் செய்யப்பட்டு பயன்பாட்டிலிருந்து ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>50 -0305 கெப் வண்டி மாவட்ட செயலாளரின் பெயரில் பெற்றுக்கொள்ள தேவையான ஆவணங்களை கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்கு அனுப்பபட்டுள்ளது. | இந்த பயன்பாட்டிலிருந்து ஒதுக்குதல் செயற்பாடடை செய்யும் போது மோட்டார் வாகன திணைக்களம் உட்பட பல நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் இந்த நடவடிக்கையை செய்ய வேண்டியிருந்ததால் இந்த செயற்பாட்டிற்கு குறிப்பிடத்தக்களவு காலம் செலவாகும் என்பதை அறியத்தருகிறேன். |
| சகல வாகனங்களிலும் அரச இலட்சினை முத்திரையிடப்படவில்லை | இந்த அலுவலகத்திற்குறிய சகல வாகனங்களிலும் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயரை குறிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

| | | |
|---|---|---|
| மீளாய்வு வருடத்தினுள் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து வரும் பயன்படுத்தாத வங்கி கணக்குகள் தீர்க்கப்படவில்லை. | இந்த அலுவலகத்தின் 2021 ஆம் வருடத்திலோ அல்லது அதற்கு முன்னைய வருடங்களில் அவ்வாறான பயன்பாட்டிலில்லாத வங்கி கணக்குகள் இருக்கவில்லை | |
| ஒரு வருடத்திற்கு அதிகமான காலத்திலிருந்து இருக்கும் மீதிக் கடன் பற்று காணப்பட்டது. | ஒரு வருடத்திற்கு மேல் கடன் பற்றுக்கு சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதி, சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தர்களின் கடன் மீதி, ஓய்வு பெற்ற மற்றும் இறந்த உத்தியோகத்தர்களினதும் கடன் மீதி உள்ளடங்குவதுடன் வெவ்வேறாக அந்தந்த கடன் மீதி இருக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | <u>சேவை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதி</u><br>திருமதி எச்.எம்.எஸ்.நிரோசா<br>முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்<br>மாவட்ட செயலகம்<br><br>சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இந்த பெண் உத்தியோகத்தர் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினது DP/02/13/2018 இலக்க மற்றும் 2022.06.09 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதுடன் கடன் பற்று உத்தியோகத்தரின் மாதாந்த சம்பளத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>திரு ஆர்.பீ.பீ.கே.ரத்னவீர<br>கிராம உத்தியோகத்தர்<br>பிரதேச செயலகம்<br>மத்திய நுவரகம் பலாத<br><br>சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இவ் உத்தியோகத்தரினால் கொடுப்பனவு செய்யப்படாமலுள்ள கடன் மீதியை பெற்றுக்கொள்வதற்கு உத்தியோகத்தருக்கு எதிராக 00495/M/21 இலக்கத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அநுராதபுர மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2024.02.14 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டதுடன் அது 2024.06.19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.<br><br>திரு ஆர்.எச்.கே.வன்னிநாயக்க<br>கிராம உத்தியோகத்தர்<br>இபலோகம பிரதேச செயலகம்<br><br>சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இவ் உத்தியோகத்தரினால் கொடுப்பனவு செய்யப்படாமலுள்ள கடன் மீதியை பெற்றுக்கொள்வதற்கு உத்தியோகத்தருக்கு எதிராக 30483/M இலக்கத்தின் கீழ் சட்டமா அதிபர் |

| | | |
|---|---|---|
| | | திணைக்களத்தினால் அநுராதபுர மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் 2022.11.19 ஆம் திகதி இந்த உத்தியோகத்தர் மரணமடைந்துள்ளார். உத்தியோகத்தர் மரணமடைந்துள்ளதால் எதிர்காலத்தில் அவரது கடன் மற்றும் எஞ்சிய வட்டியை விதவை மற்றும் அநாதைகள் நிதிய கொடுப்பனவில் பெற்றுக்கொள்ளபடவுள்ளது.<br><br>பீ.பீ.ரீ. பெனான்டோ<br>கிராம உத்தியோகத்தர்<br>தபுத்தேகம பிரதேச செயலகம்<br><br>இந்த உத்தியோகத்தர் அனர்த்த மற்றும் விழா முற்பணக் கடன் மீதி அறவீடு செய்யாமை பற்றி செய்யப்பட்ட நி.பி 104 (அ) விசாரணைப் பிரகாரம் நி.பி 113 இன்படி கடன் மீதி திணைக்கள புத்தகங்களிலிருந்து 2022 டிசம்பர் மாதம் வெட்டிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது<br><br><u>சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் பற்று</u><br>திருமதி கே.எம்.கே.காங்கர மெணிகே<br>பலுகஸ்வெவ பிரதேச செயலகம்<br><br>பலுகஸ்வெவ பிரதேச செயலகத்தில் வேலை செய்து சேவையிலிருந்து இடைவிலகிய முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் திருமதி கே.எம்.கே.காங்கர மெனிக்கேவிடமிருந்து அறவிட வேண்டிய கடன் பற்று மற்றும் மீதி வட்டியை குறித்த உத்தியோகத்தரினால் 2023.03.23 ஆம் திகதி 595396 இலக்கமுடைய மற்றும் 2023.04.20 ஆம் திகதி 595467 ஆம் இலக்க பற்றுச்சீட்டு மூலம் பலுகஸ்வெவ பிரதேச செயலாளருக்கு முழுமையாக செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | ஓய்வு பெற்ற மற்றும் இறந்த உத்தியோகத்தர்களின் கடன் பற்று<br><br>திருமதி<br>எச்.எம்.எம்.ஆர்.கே.ஹேரத்<br>பிரதேச செயலாளர்<br><br>கல்னவ பிரதேச செயலத்தில் சேவையாற்றும் போது ஓய்வு பெற்ற இந்த உத்தியோகத்தரின் கடன் பற்று 2024 ஏப்ரல் மாதத்தினுள் உத்தியோகத்தரின் ஓய்வுதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்டுள்ளது.<br><br>திரு எஸ்.ஏ.எஸ்.ரத்நாயக்க<br>கிராம உத்தியோகத்தர்<br>பிரதேச செயலகம், கெபிதிகொள்ளாவ<br>இந்த உத்தியோகத்தரின் கடன் மீதி அவருக்கு உரித்தான மரண பணிக்கொடை மூலம் 2022 ஒக்டோபர் மாதம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| அடையாளம் கண்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள் செயற்படுத்தும் மதிப்பீட்டை அளவீடுசெய்ய செயற்றிறன் இலக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை | பொதுவாக வருடாந்த வரவு செலவு ஒதுக்கீட்டின் அடிப்படையில் பல்வேறு வேலைத்திட்டங்களின் கீழ் கிராம மட்டத்தில் பல்வேறு அளவில் 10,000 ரூபாவிலிருந்து செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு செயற்றிறன் இலக்கு நியமம் செய்வது பிரயோக ரீதியாக உறுதியாக செய்ய முடியாத சிக்கலுக்குறிய நிலையாவதால் அவ்வாறானதொன்று செய்யப்படவில்லை. | |
| 2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்கமுடைய அரச நிருவாக சுற்றறிக்கை ஒழுங்கு விதிகள் பிரகாரம் உரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட மனித வள திட்டத்தின் மூலம் பணியாளர் குழாத்தின் நூற்றுக்கு 50 க்கு அதிகமானவர்களுக்கு குறைந்தளவு 12 மணித்தியாலங்களுக்கு குறைந்த பயிற்சி சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | 2021 ஆம் வருடத்திற்கான மனித வள திட்டம் தயாரிக்கப்படவில்லை. | நிதி அமைச்சின் செயலாளரது 01/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை படி அந்தந்த உத்தியோகத்தர்களினால் சேவை அமைப்பிற்கு ஏற்ப தகைமை பெற்றுக்கொள்வதற்காக பூரணப்படுத்த வேண்டிய கட்டாய பயிற்சிக்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என அறிவித்துள்ளதால் மேலதிக பயிற்சி செயற்றிட்டங்களை செயற்படுத்த சந்தர்ப்பம் இல்லை. |
| சகல பணியாளர் குழாத்தினரையும் உள்ளடக்கிய செயற்றிறன் ஒப்பந்தங்கள் தயாரித்து ஒப்பந்தங்கள் செய்திருக்கவில்லை | 2021,2022 மற்றும் 2023 ஆம் வருடங்களுக்கான செயற்றிறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2024 ஆம் வருடத்திற்கு 02/2018 (1) சுற்றறிக்கை பிரகாரம் செயற்றிறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திட அவசியம் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கவும், திறன் விருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் நிறுவனத்தினுள் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் பெயரிடப்படவில்லை. | 2021 ஆம் வருடத்திற்கு பெயரிடப்படவில்லை. | தற்போது 2024 ஆம் வருடத்திற்கு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் பெயரிடப்பட்டுள்ளார். |
| நிறுவனத்தின் கணக்கு தொடர்பான கணக்காய்வு கருத்து சிறப்பற்ற மட்டம் அல்லது பாதிப்பான மட்டத்தில் இருந்தது. | 2021 ஆம் வருடத்தில் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட குறைபாடு காரணமாக கணக்காய்வு கருத்து சிறப்பற்ற மட்டத்தில் காணப்பட்டது. | 2023 ஆம் வருடத்தில் உண்மை மற்றும் நியாயமானது என தெளிவான கருத்து கிடைக்கப்பெற்றுள்ளது. |
| அடையாளம் கண்ட செயற்திறன் சுட்டியை அடைவது 24% விட குறைந்தளவில் காணப்பட்டது. | 2021 ஆம் வருடத்தில் இந்த அலுவலகத்தினால் இலக்கை அடைந்துகொள்ளும் வீதம் 50% க்கும் 74% க்கும் இடைப்பட்டதாகும். | 2021 ஆம் வருடத்திலும் இந்த அலுவலகத்தினால் இலக்கை அடைந்துகொள்ளும் வீதம் 50% க்கும் 74% க்கும் இடைப்பட்டதாகும். |
| திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களினால் வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களளவு 50% விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2021 ஆம் வருடத்தில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று காரணமாக பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்படவில்லை. | நிதி அமைச்சின் செயலாளரது 01/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை படி அந்தந்த உத்தியோகத்தர்களினால் சேவை அமைப்பிற்கு ஏற்ப தகைமை பெற்றுக்கொள்வதற்காக பூரணப்படுத்த வேண்டிய கட்டாய பயிற்சிக்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என அறிவித்துள்ளதால் மேலதிக பயிற்சி செயற்றிட்டங்களை செயற்படுத்த சந்தர்ப்பம் இல்லை. |
| அரச கணக்குகள் குழுவின் சிபாரிசு / கட்டளை நடைமுறைப்படுத்தப்படவில்லை . | அரச கணக்குகள் குழுவினால் 2012.06.30 ஆம் திகதி வழங்கப்பட்ட கட்டளை பிரகாரம் 2001 -2006 ஆம் காலப்பகுதியினுள் நெல் கொள்வனவு செய்வதற்கு திரைசேறியினால் வழங்கிய முற்பணத் தொகை அறவிடுவதற்கு பின்வரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>1.இலங்கை கூட்டுறவு சங்கம் 3,485,983.50<br>கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் இலக்கம் ச.சங்.தெ/ செ.சங்.பிர.பா/05/04 மற்றும் 2021.01.24 ஆம் திகதிய கடிதப் பிரகாரம் இலங்கை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் பொது முகாமையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை மூலம் எவ்வித பற்றும் செலுத்தவேண்டியதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உறுதிப்படுத்தும் ஆவணம் போதுமானதாக இல்லை. அதன்படி இந்த அலுவலகத்தின் கடந்த கால அறிக்கை மற்றும் கோவை பரிசோதித்து மேலய நடவடிக்கை செய்யப்படவுள்ளது. | 2021.12.31 ஆம் திகதிக்கு மேலும் அறவிட வேண்டிய மீதி ரூபா 32,247,247.87 தொகையில் ரூபா 850,000 தொகை தற்போது வரை அறவிடப்பட்டுள்ளதுடன் அதன்படி மேலும் அறவிடப்பட வேண்டிய மீதித் தொகை ரூபா 31,397,247.87 ஆகும். |

| | | |
|---|---|---|
| | 2. கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகம் - 11,184,593.51<br>மரதன்கடவல மற்றும் சிராவஸ்திபுர கமநல சேவை நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள முற்பணத்தில் மேலும் அறவிட வேண்டிய ரூபா 2,120,000.00 தொகை முற்பணத்திற்கு நெல் ஆலை உரிமையாளர் சிறை தண்டனை அனுபவித்து (வழங்கு இலக்கம் - HC/02/2009 மற்றும் HC/92/2009) வந்துள்ளதுடன், மேலும் அறவிடுவது முடியாதுள்ளதால் நட்டத்தை வெட்டிவிடுவதற்கு தயாரிக்கப்பட்ட ஆவணம் அரச நிருவாக ,உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் ஆண்டியாகல , எப்பாவல, தலாவ ஆகிய கமநல சேவை நிலையங்களுக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.(வழக்கு இலக்கம் - HC64/2019,HC25/2019 HC62/2009)<br><br>3.நொச்சியாகம பல்நோக்க கூட்டுறவு சங்கம் - 3,823,817.90<br>மேலும் அறவிட வேண்டிய தொகை தொடர்பில் வட மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் இலக்கம் NPC/CCD/D4/540/ஏவர II மற்றும் 2023.12.14 ஆம் திகதிய கடிதம் மூலம் நொச்சியாகம பல்நோக்க கூட்டுறவு சங்க கணக்காய்வு நடவடிக்கை சொத்து மற்றும் பொருப்பு அடையாளம் காணுதல் நடைபெறுவதாகவும், முடிவுறுத்தும் நபரினால் இறுதி முடிவுறுத்தல் முன்மொழிவு தயாரித்து சமர்ப்பித்த பின்னர் அரச கடன் அடைத்தல் முதன்மைபடுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அநு/திலே/2/4/1/2011 மற்றும் 2024.04.24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வட மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் தற்போதைய நிலைபற்றி விசாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேலய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>4.கஹட்டகஸ்திகிலிய பல்நோக்க கூட்டுறவு சங்கம் - 3,866,281.45<br>அநுராதபுரம் மாவட்ட நீதி மன்றில் வழக்கு இலக்கம் 24443/M இன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த வழக்கு திகதி 2024.06.28 | |

| | | |
|---|---|---|
| | 5.எப்பாவல பல்நோக்கு கூட்டுறவு சங்கம் - 4,950,304.01<br>எப்பாவல பல்நோக்க கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளரினால் 2023.08.24 ஆம் திகதிய கடிதம் மூலம் சங்கத்தின் முதலீட்டு தொகையின் வட்டி மூலம் மாதாந்தம் ரூ 30,000.00 வீதமும் விதை கருத்திட்டத்தின் இலாபத்தில் வருடாந்தம் ரூபா 500,000.00 வீதமும் செலுத்துவதற்கு 2023.08.21 ஆம் திகதி நடைபெற்ற கௌரவ பணிப்பாளர் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி 2024 வருடத்தின் ஜனவரி மாதம் மற்றும் பெப்ரவரி மாதம் ரூபா 30,000.00 வீதம் மாவட்ட செயலகத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த தொகை திறைசேரியின் பல்வித முற்பண கணக்கு 7000-0-0-250-03-419 கணக்கு இலக்கத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>6.வட மத்திய மாகாண பல்நோக்க கூட்டுறவு சங்கம் - 4,086,267.50<br>இது தொடர்பில் அநுராதபுரம் மாவட்ட நீதி மன்றில் வழக்கு இலக்கம் 23598/M இன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த வழக்கு திகதி 2024.05.28 | |

ஈ.எம்.சீ.ஹேரத்
பிரதான கணக்காளர் (பதில்)
மாவட்ட செயலகம்,
அநுராதபுரம்.

ඊ.එම්.සී. හේරත්
ප්‍රධාන ගණකාධිකාරී (වැ.බ.)
අනුරාධපුර දිස්ත්‍රික් ලේකම් වෙනුවට

ஜே.எம்.ஜே.கே.ஜயசுந்தர
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
அநுராதபுரம்.

J.M.J.K. JAYASUNDARA
District Secretary
Government Agent
Anuradhapura

**செயலாளரின் பரிந்துரை**

---

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

**அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

---

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்